**செய்தி வெளியீடு எண்: 050** **நாள்: 20.01.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (20.01.2019) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாவில் ஆற்றிய உரை.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று(20.01.2019) புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

ஜல்லிக்கட்டு திருவிழாவை காண வந்துள்ள அத்தனைபேருக்கும் எனது முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன், தமிழனென்றால் அதற்கு தனிப் பெருமை உண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் அதன்படி தை பிறக்கின்றபோதே ஜல்லிக்கட்டு விளையாட்டும் துவங்கிவிடுகிறது. இது ஒரு வீர விளையாட்டு, இதனை நம் முன்னோர்கள் நமக்கு வழங்கிவிட்டு சென்றிருக்கிறார்கள். இவ்விழா நம் இளைஞர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் தொன்றுதொட்டு காலங்காலமாய் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு ஆகிய பகுதிகளில் புகழ்பெற்று விளங்கிய ஜல்லிக்கட்டானது, இப்பொழுது விராலிமலையிலும் அதற்கு இணையாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு ஒரு சாதாரண விளையாட்டு அல்ல, இது காளையை அடக்கக்கூடிய வீர விளையாட்டு ஆகும். இங்கு காளைகளை அடக்கக்கூடிய வீரர்கள் என்முன்னே நின்று கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய விவசாய குடிமக்கள் தம் குழந்தையைப் போல் வளர்த்த இந்தக் காளைகளை இந்த வீர விளையாட்டு வீரர்கள் அடக்க தயாராக இருக்கின்றார்கள். தமிழன் என்று சொன்னாலே வீரத்திற்கு புகழ் பெற்றவர்கள் என்பதை இந்த ஜல்லிக்கட்டின் வாயிலாக உணர்த்தப்படுகிறது. இன்று இந்த நிகழ்ச்சியில் ஆயிரம் காளைகள் கலந்துகொண்டு உள்ளன. இங்கு நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாவானது மிகப் பெரும் விழாவாக உருவெடுக்கப்பெற்றுள்ளது. இந்த காளைகளை அடக்குவதற்காக 600 வீரர்கள் திரண்டு நிற்கின்றார்கள். அவர்களுக்கும் இந்நேரத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு திருவிழா உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, பாதுகாப்புடன் விதிமுறைகளை பின்பற்றி நடைபெற்று வருகிறது. உச்சநீதிமன்றம் இவ்விளையாட்டிற்கு என்னென்ன விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோ அதன்படி நடைபெற்று வருகிறது. போட்டியில் பங்குபெறும் வீரர்கள் தவிர முதல் முறையாக பார்வையாளர்களுக்கும் காப்பீடு செய்யப்படுகிறது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மாவட்ட மக்கள் கண்டுகளிக்க இரவு பகல் பாராது கடந்த பத்து நாட்களாக ஏற்பாடு செய்து மேலும், இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அமைச்சர் பெருமக்கள் , நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை பங்கேற்கச் செய்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்களும் கலந்துகொள்வார் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ஆர்.காமராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர், திரு கடம்பூர் ராஜூ, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வெல்லமண்டி ந.நடராஜன், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு ஜி.பாஸ்கரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு. கணேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**